**FRIDAY SERMON/ வெள்ளிக்கிழமை குத்து.ஃ.பா**

**(11 AUGUST 2017) 18 DHUL QADDAH / 1438 HIJIRA**

# SURA AT- TAKAATHUR (Chapter: 102)

# சூரத்துத் தகத்தூர் (பேராசை)-அதிகாரம் 102



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும் தஅவ்சுதும் அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

1. அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்
2. செல்வத்தைப் பெருக்கும் ஆசை உங்களை (அல்லாஹ்வை விட்டும்) பராக்காக்கி விட்டது
3. நீங்கள் மண்ணறைகளை சந்திக்கும் வரை
4. அவ்வாறில்லை, விரைவில்(அதன் பலனை) நீங்கள் அறிந்துக்கொள்வீர்கள்.
5. பின்னர் அவ்வாறல்ல, விரைவில்(அதன் விளைவை) நீங்கள் அறிந்துக்கொள்வீர்கள்.
6. அவ்வாறல்ல- மெய்யான அறிவைக் கொண்டறிந்திருப்பீர்களானால்(அந்த ஆசை உங்களை எட்டாமலிருந்திருக்கும்)
7. நிச்சயமாக (அவ்வரிசையால்) நீங்கள் நரகத்தைக் காண்பீர்கள்
8. பின்னும் நீங்கள் அதை உறுதியாக்க கண்களால் பார்ப்பீர்கள்.
9. பின்னர் அந்நாளில், இம்மையில் உங்களுக்கு கிடைத்திருந்த பௌதீக சுகங்களைப் பற்றி நிச்சயமாக உங்களிடத்தில் கேட்கப்படும்.

இந்த அத்தியாயம், அனைத்தையும் தனக்குரியதாக்கி கொள்ளுவதற்கான பேராசையுடன் இருப்போர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகும். அவர்கள் செல்வங்களை மேலும் மேலும் குவித்துக் கொள்ள ஆசைப்படுவோர்களாகயிருக்கின்றனர்.

## வசனம் - 2

**“செல்வத்தைப் பெருக்கும் ஆசை உங்களை (அல்லாஹ்வை விட்டும்) பராக்காக்கி விட்டது”**

செல்வங்களை பெருக்குவதற்கான ஒருவரின் பேராசை, உன்னதமான இடத்தை அடைவதற்கான ஒருவரின் வெறித்தனம், பதவியினை அடைவதற்கான விருப்பம், தோழர்களுடையவும், சீடர்களுடையவும்,ஆதரவாளர்களுடையவும், பின்பற்று கின்றோர்களுடையவும், எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான எண்ணம், முழுமையான உற்ப்பத்தி, சேனைபலம் அமைத்தல்

போன்ற கருத்து ஒரு நபரை மட்டுமல்ல, அது சமுதாயத்தையும் இராஜியத்தையும் பாதிக்கும் ஒருவிஷயமாகும்.

எல்லாவற்றின் மீதும் மேலாண்மை, பிரத்தியேக உரிமை (ஏகபோக உரிமை, ஏகாதிபத்தியம், குத்தகை) போன்றவை ஒரு நபரில் இயங்குவது தடைச்செய்யப் படக்கூடியவையாகும். இது நல்லொழுக்கங்களுக்கும் எதிரானவையாகும். ஏகபோக உரிமை (Monopoly) அல்லது பிரத்தியேக உரிமை என்பது பொதுமக்களை சுரண்டுதல் ஆகும். அத்தகைய ஒரு நபரை அதாவது ஏகாதிபதியை பொதுமக்கள் பின்பற்றிக் கொண்டால் பௌதீக சூழ்நிலை கவலைக்குரியதாக மாறிவிடும். ஏகாதிபதியின் அதிகாரமும் செல்வமும் இவ்வுலகை பின்னோக்கி கொண்டு செல்கின்றது. பிரத்தியேக உரிமை உதயம் செய்துகொண்டால், அங்கு போட்டிகள் எழும்புகின்றது. ஒன்றுக்கொன்றான அத்தகைய போட்டிகளில் மற்றவர்களும் பங்காளிகளாகிகொள்வார்கள். ஒன்றுக்கொன்று போட்டிகள் நிகழும் பொழுது அவரது அதிகாரத்தின் கீழ், அதாவது தம் ஏகபோக உரிமையின் கீழ் ஏனையவர்களை கொண்டுவர முடியாத சூழ்நிலை உருவாகின்றது. அந்நேரம் அவரின் கவனம் மேலும் செல்வங்களை அதிகரிப்பதற்காக வேறுவழியில் செல்கின்றது. அச்சுழ்நிலையில் அதை விட முக்கியத்துவம் வாய்ந்த தொழுகை, நல்லொழுக்கம் போன்றவையிலிருந்து அவரின் கவனம் விலகி நிற்கின்றது. இவ்வசனம் வாயிலாக, ஆன்மீக நோக்கத்தின் அடிப்படையில் ஒரு தெளிவான எச்சரிக்கையை அளித்திருப்பது, அக்காரணத்தாலாகும்.

மனிதனை (அவன் அல்லது அவள்) மரணம் கீழ்படிய வைக்கும் நேரம்வரையில் அவர்கள் இவ்வுலகின் அற்பமான விஷயங்கள் மீதும் பொருட்கள் மீதும் மூழ்கியிருக்கின்ற ஒரு இயல்புடன் இருக்கின்றனர். மரணம் நெருங்கி கொள்ளும் பொழுது, பூமியில் அவர்களின் கடந்தகால வாழ்க்கையைப் பற்றிய ஒரு காட்சி அவர்களுக்கு முன்பு காண்பிக்கப் படுகின்றது. அந்நேரம், தம் வாழ்க்கை மிக மோசமாக இருந்தது என்பதைகுறித்து அவர் உணர்ந்திடுவார். காரணம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், முற்றிலும் முன்னுரிமை அளித்து கொள்ளவேண்டியதுமான விஷயங்கள் மீது எந்த கவனமும் அவர்கள் செலுத்தவில்லை.

## வசனங்கள் 3, 4, 5

**"நீங்கள் கபறுகளைச் (மண்ணறைகளை) சந்திக்கும் வரை**
**அவ்வாறில்லை, விரைவில்(அதன் பலனை) நீங்கள் அறிந்துக்கொள்வீர்கள்.**
**பின்னர் அவ்வாறல்ல, விரைவில்(அதன் விளைவை) நீங்கள் அறிந்துக்கொள்வீர்கள்."**

இவ்வசனத்தின் பொருள், நாம் சுயம் மண்ணறைகளில் சென்றுவிட்டோம் என்றும் எல்லாவித தற்காலிகமான ஆற்றலகளையும் இழந்து விட்டோம் என்றும் அத்தோடு ஒரு வாழ்க்கையின் அனைத்து சூழ்நிலைகளையும் அழித்துவிட்டோம் என்றும் உள்ள உண்மையை நீங்கள் உணர்ந்துக் கொள்ளவே செய்வீர்கள். அந்நேரம் இந்த உண்மை உங்களின் முன்னால் வெளிப்பட்டுக்கொள்ளும். **இந்த அற்பமான வாழ்க்கையில், இந்த உண்மையை பகுத்தறிவதற்கு ஏன் மனிதன் முயர்ச்சிக்காமல் இருக்கின்றான்? இந்த உண்மையை உணர்ந்து கொள்ள ஏன் மனிதனுக்கு தாமதமாகிவிடுகின்றது?**

## வசனங்கள் 6, 7, 8

**"அவ்வாறல்ல- மெய்யான அறிவைக் கொண்டறிந்திருப்பீர்களானால்(அந்த ஆசை உங்களை எட்டாமலிருந்திருக்கும்)**
**நிச்சயமாக (அவ்வரிசையால்) நீங்கள் நரகத்தைக் காண்பீர்கள்**

**பின்னும் நீங்கள் அதை உறுதியாக்க கண்களால் பார்ப்பீர்கள்."**

மூன்று வகைப்பட்ட "யக்கீன்" (yaqeen) உள்ளன. யக்கீன் என்ற வார்த்தைக்கு நிச்சயம் தவாறத தன்மை என அர்த்தம் கூறலாம். இவ் வார்த்தை திருக்குர்-ஆனில் கூறப்பட்டிருக்கின்றது. "இல்முல்யக்கீன்" (ilm-ul-yaqeen) சிந்தனைகள் மூலம் அடைந்துவிடும் திடமான ஞானம். அய்னு யக்கீன் (ain-ul-yaqeen) ஒருவரின் தனிப்பட்ட முறையிலான ஆராய்வு மூலம் அடையும் ஞானம். "ஹகுல்யக்ஹீன்" (haqq-ul-yaqeen)

முழுமை பெற்ற உண்மையான ஞானம். விதிநாளில், எந்த தவறும் இருக்காத ஞானம். அதாவது தரிசன அனுபவத்தில் எந்த கருத்து தவறும் நிகழாத ஞானம்.

முதல்பகுதி, அதாவது சிந்தித்து உறுதிப்படுத்தல் அல்லது அனுமானித்து உறுதிப்படுத்திக்கொள்ளுதல் ஆகும். அதுவே இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது நாம் ஒருவரிடமிருந்து எதாவது கேட்கின்றோம் அல்லது நம் சுய அறிவின் அடிப்படையில் சில திர்மானங்களில் சென்றடைகின்றோம். இது நம் தனிப்பட்டமுறையிலான மனநிலை மட்டும் ஆகும்.

இவ்வாறு நாம் சிந்நித்தால் இவ்வுலக வாழ்க்கையில் அழகான பொருள்களுக்கும் அதன் மதப்பிற்கும் நாம் மிகப்பெரிய முக்கியத்துவம் அளித்துக்கொள்வோம். அவ்வாறு, தேவையற்றதும் முக்கியத்துவம் இல்லாததுமான விஷயங்களின் பின்னால் சென்று நம் விலைவாய்ந்த நேரத்தை இழந்துவிடுவோம். ஆனால் நம் சிந்தனைதிறனை இப்போது நாம் எழுப்பிக் கொள்ளாமலிருந்தால், நாம் தவறாக மேற்கொண்ட அனைத்து தீர்மானங்களுடையவும் தண்டனைக்கு ஆளாகிக்கொள்வோம். நரகத்தை நம் கண்களால் நாம் கண்டுகொள்வோம்.

## வசனம் - 9.

**“பின்னர் அந்நாளில், இம்மையில் உங்களுக்கு கிடைத்திருந்த பௌதீக சுகங்களைப் பற்றி நிச்சயமாக உங்களிடத்தில் கேட்கப்படும்.”**

நிச்சயமாக நம்மிடத்தில் கேட்க்கப்படும். அதாவது இம்மையில் நாம் அனுபவித்துக்கொண்ட அனைத்துவகைப்பட்ட பௌதீக இன்பங்களின் பொறுப்பும் நமக்காகும். அது இன்பங்களின் பெயரிலானாலும் சாரி தற்பெருமையின் பெயரிலானாலும் சரி, அடிப்படையற்ற விஷயத்தின் பெயரிலானாலும் சரி, விலையிழந்ததும் மோசமானதுமான பொருட்களின் பெயரிலனாலும் சரி, அல்லது அனுமதிக்கப்பட்ட விஷயங்களில் நீங்கள் காட்டிய அளவிற்கதிகமான ஆனந்தத்தின் பெயரிலானாலும் சரி. இவையைக் குறித்து நிச்சயமாகவும் உங்களிடத்தல் கேட்கப்படும். ஆகவே நாம் அனுமதிக்கப்பட்ட எல்கைக்குள் நின்றே செயல்படவேண்டும்.

இந்த அற்பமான வாழ்க்கையில், இன்பங்களில் முழுமையாக கரைந்து சேர இஸ்லாம் நம்மை அனுமதிப்பதில்லை. காரணம் இத்தகைய இன்பங்கள் நம்மை சுயநலவாதியாக்கி கொள்கின்றது.

இந்த இன்பங்கள், நம் விலையுயர்ந்த நேரங்களை பறித்துக் கொள்கின்றது. அத்தோடு நம் செல்வங்களையும் நம் திறனையும்! ஆனால் அதேநேரம் நம் செல்வங்களையும் திறனையும் நம் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக செலவுசெய்யலாம். (அவ்வாறு நாம் செய்வதில்லை) இந்த இன்பங்கள், அல்லாஹ்வின் மீதான நம் கடமைகளையும் மற்றும் நம் ஆன்மாவின் மீதான நம் கடமைகளையும் மறக்கச்செய்கின்றது.

இத்தகைய இன்பங்கள் நம் பௌதீகமான உறுப்புகளுக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது. ஆனால் ஒரு நாள் நம் பௌதீக உடல் பூமிக்குள் அடக்கம் செய்யப்படும். ஆகவே நம் ஆன்மாவை நாம் புறக்கணிக்காமலிருக்க வேண்டும். நாம் என கூறும் உயிரினத்தின் முக்கியமான ஒருபகுதியாகுமது.

இம்மையில் நம் வாழ்க்கை மிக சிறிதானது என்பதை நாம் எப்பேதும் நினைவில் கொள்ள வேண்டும். நம் திறனுக்கு உட்பட்ட அனைத்து காரியங்கள் மீதும் நமக்கு ஒரு கடமையிருக்கின்றது. அதை நிறைவேற்றிட வேண்டும். அல்லாஹ்வின் மீதான நம் கடமைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதை நாம் ஒரு போதும் மறக்காமலிருக்கவேண்டும். அத்தோடு ஆன்மாவின் மீதான நம் கடமைகளிலிருந்தும் நம் ஞாபகம் விலகி செல்லாமல் லிருக்கவேண்டும். பூமியில் நம் வாழ்வு நிரந்தர மற்றதாகும். எதிர்காலத்தில், அதாவது மரணதிற்க்கு பின்னால் வரும் வாழ்கையே நிரந்தரமாக நிலை நிற்ப்பது. இப்பூமியில் நம்மை அல்லாஹ் அனுப்பிவைத்தபோது நம் மீது ஒரு பெரிய சுமை தரவில்லை. அவ்வாறு, சுமையுடன் அவன் நம்மை அனுப்பி வைக்கவும் இல்லை. காரணம் நம் பௌதீக உடல் மிக பலவீனமானதாகும் என்பதை அல்லாஹ் நன்கறிகின்றான். அதனால் அவன் நமக்கு தனிப்பட்ட முறையிலான விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான அனுமதியை அளித்திருக்கின்றான். ஓய்வை அனுமதித்திருக் கின்றான். ஆகவே அவனிடம் நாம் நன்றி கெட்டவராக யிருக்க கூடாது என்று மட்டும். அவனை மட்டும் வணங்குவதிலிருந்தும் விலகி செல்லாமலிருக்க வேண்டும். நம் மீது அவன் பொழிந்த அருள்களையும்

மறவாமலிருக்கவேண்டும். அவன் விடுத்துள்ள கட்டளைகளிலிருந்தும் நம் ஞாபகம் விலகிச் செல்லாமலிருக்க வேண்டும். கட்டளைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். அதற்கு நாம் எப்போதும் சரியான பாதைவழியாக பயணம் மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் மீதான கடமைகளை எப்போதும் நிறைவேற்றுகின்றவர் யார், அவர் மட்டுமே எப்போதும் மேன்மையடைந்து விடுவது. மாறாக இவ்வுலக கவர்ச்சிகளில் மூழ்கி, கொள்பவர் யார், அவரே தான் இழந்துவிட்டவர்.

இந்த தற்காலிகமான உலகில் அளவிற்கதிகமாக செல்வங்களை சேர்க்கவேண்டும் என்ற எண்ணத்திலிருந்தும் அதிகமான உணவாசைகளிலிருந்தும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! அருள் நிறைந்தவாறு அவனையே சென்றடைவதற்காக அவன் நமக்கு உதவி புரிவானாக! இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.


**Issued by:**

Jamaat Ul sahih Al Islam

Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817